4th August 1966]

(இ) மீனளத் துறை, 50,000 கிலோ கிராம் நைலான் நூல் வாங்கி மீனவர்களுக்கு வழங்குகின்றது. எஞ்சிய 50,000 கிலோ கிராம் நைலான் நூலை மீனவர்கள் நேரடியாக அல்லது தங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் "மெஸர்ஸ் கார்வார் நைலான்" போன்ற உள்நாட்டு நிறுவனங்களில் வாங்கிக் கொள்கின்றனர்; அல்லது உலர்ந்த மீன், உறைய வைத்து பதப்படுத்திய இருல், பெரிய இருல், பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கப்படும் இருல்கள், சூடை மீன்கள் முதலியவற்றை மீன் ஏற்றுமதி செய்வோர் சிலர் பெற்ற இறக்குமதி உரிமங்கள் மீது ஜப்பானிலிருந்தும், ஹாலந்திலிருந்தும் நைலான் நூல் இறக்குமதி செய்யப்படுகிறது.

* 93 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீன் வலைக்கு சப்ளை செய்யும் பருத்தி நூலுக்கு சப்சிடி வழங்கும் திட்டமிருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : ஆம், மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கழகங்களின் மூலம் மீனவர்களுக்கு வலைகள் பின்னுவதற்காக வழங்கப்படுகிற பருத்தி நூலின் கிரயத்தில் 25 சத வீதத்தை அரசாங்கம் உதவித் தொகையாக வழங்குகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நேரடியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டபோது நைலான் நூலுக்கு இருந்த விலைக்கும், கார்வார் நூலுக்கும், ஏற்றுமதி செய்யப்பட்டு விசேஷமாக இன்சென்டிவ் கொடுத்து இறக்குமதி செய்யப்படுகிற நூலுக்கும் விலை வித்தியாசம் இருக்கிறது. அதற்குரிய காரணம் என்ன? இந்த வித்தியாசத்தைத் தணிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : விலையில் வித்தியாசம் இருக்கிறது. அதைத் தணிப்பதற்கு நைலான் நூல் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வெளிநாட்டிலிருந்து ரா மெட்டீரியல்ஸ் தருவிப்பதற்காக 400 டன்னுக்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மத்திய அரசு இப்போது விசேஷமாக 400 டன்னுக்கு அனுமதி வழங்கியிருந்தாலும் இந்த ராஜ்ய மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு இப்போது பல துறைகளிலிருந்தும் கிடைக்கக் கூடிய நைலான் நூல் போதும் என்று கருதுகிறதா? அல்லது மேற்கொண்டும் பெற்றுத்தர என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வப்போது இவையெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.